IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 111/2022 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ஆண்டி | CASTE | : | |
| S/O | சடைமாயத்தேவர் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தும்பிச்சம்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 66 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.09.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1ம் வாதி இறந்துபோன ராமச்சந்திரனின் தங்கை. ராமச்சந்திரனுக்கு கலைச்செல்வி, உஷா, சரவணன் என்று 3 பிள்ளைகள். மேற்படி 3 நபர்களில் தற்போது கலைச்செல்வி மட்டும் உயிருடன் உள்ளார். சரவணன் 25.08.2020ல் இறந்தார். சரவணனின் மனைவி பெயர் மங்களேஸ்வரி. சரவணன் இறக்கும்வரை அவர் தந்தை ராமச்சந்திரன் சரவணன் பராமரிப்பில் இருந்தார் என்றால் சரிதான். ராமச்சந்திரன் இறக்கும்வரை மங்களேஸ்வரி அவரை பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.10 எனது ஆதார் அட்டையின்படி கதவுஎண் 3/42 உள்ள வீட்டில்தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டில் நான் 20வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் கதவு எண் 34/3 உள்ள வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் எனக்கு கதவு எண் தெரியாது. நான் வழக்கிற்காக கதவு எண் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராஜூ மகன் ராமச்சந்திரன் என்பவர் உயில் எழுதிய ராமச்சந்திரனின் தாய்மாமா மகன் ஆவார், நடராஜன் என்பவருக்கு சித்தப்பா மகன் ஆவார்.

3. மேற்படி நடராஜன் 1ம் வாதி கணவர் என்றாலும் 2, 3 வாதிகளின் தகப்பனார் என்றாலும் சரிதான். நடராஜன் முதலில் சேர்மேனாக இருந்தார், தற்போது வீட்டில் தான் உள்ளார். அவர் தும்பிச்சம்பட்டி 3வது வார்டு, மெயின்ரோட்டின் அருகில் உள்ள வீட்டில் குடியிருக்கிறார். இறந்துபோன ராமச்சந்திரன் எந்த தேதியில் உயில் எழுதியதாக சொல்லப்படுகிறது என்றால் 21.12.2020. அந்த உயில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத்தெரியாது. அந்த உயில் யாரால் எப்பொழுது எழுதப்பட்டது என்றால் ஏற்கெனவே தயார் செய்து வைக்கப்பட்டு இருந்தது.

4. என்னை உயிலில் கையெழுத்து செய்ய யார் அழைத்தது என்றாலும் அப்போது நான் எங்கே இருந்தேன் என்றாலும் நான் மெயின் ரோட்டில் இருந்தபோது மங்களேஸ்வரி வந்து அழைத்தார். நான் அங்கு செல்லும்போதே ராமச்சந்திரன் உயில் கையெழுத்திட்டிருந்தார் என்றால் நான் அங்கு சென்றபின்பு உயில் வாசித்து காண்பிக்கப்பட்டது, அதன்பிறகு தான் ராமச்சந்திரன் கையெழுத்திட்டார். உயிலை வாசித்தபோது நான் இருந்தததாக உயில் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வாசிக்கும்போது கேட்டேன், அதன்படி தும்பிச்சம்பட்டியில் உள்ளது 54 செண்டு வினோத்துக்கு எழுதிவைக்கப்பட்டது, ஆண்டிப்பட்டியில் உள்ள 67 செண்டு கமலாவிற்கும், புதிதாக கட்டப்பட்ட வீடு அமுதவாணிக்கும், பழையவீடு மங்களேஸ்வரிக்கு அடுத்து கலைச்செல்விக்கு என்றும் எழுதித்தரப்பட்டது.

5. மேற்படி உயில் பற்றிய விவரங்களை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நடராஜன் என்பதும் துரைநடராஜன் என்பதும் ஒரே நபரின் பெயர்தான். உயில் எழுதிய சமயத்தில் யார் அங்கு இருந்தது என்றால் நான், வழக்கறிஞர், ராமச்சந்திரன், உயில் எழுதிய நபரான எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் மட்டும்தான் இருந்தோம். அந்த வழக்கறிஞர் பெயர் குருசாமி அவரை அதற்குமுன் நான் பார்த்ததில்லை. அப்போது மங்களேஸ்வரி வீட்டில்தான் இருந்தார், அவரை அந்த அறையில் அனுமதிக்கவில்லை.

6. நான் சொல்வதுபோல் 21.12.2020 ந்தேதி உயில் எழுதவில்லை என்றாலும், வழக்கறிஞர் வீட்டிற்கு வரவில்லை என்றாலும், ராமச்சந்திரன் இறந்தபிறகு நடராஜனால் போலியாக ஏற்படுத்தப்பட்ட உயில் என்றாலும் சரியல்ல. இறந்துபோன வழக்கறிஞரின் கையெழுத்தை நடராஜன் உயிலில் அவராக போட்டு உயிலை பின்னிட்டு தயார் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் நடராஜன் வீட்டில் வளர்ந்து வந்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. நடராஜனும் கதவு எண் 3/42 வீட்டில்தான் குடியிருக்கிறார் என்றால் கதவு எண் எனக்குத்தெரியாது. நான் நடராஜன் வீட்டில்தான் தனியாக குடியிருக்கிறேன். நான் அவரது வீட்டில் குடியிருப்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.12.2020 தேதியில் ராமச்சந்திரன் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவம் பார்த்துகொண்டு இருந்தார் என்றாலும் அந்த தேதியில் உயில் எழுதப்படவில்லை என்றாலும் சரியல்ல.

8. ராமச்சந்திரன் இறந்தபின் உயில் பொய்யானது என்று எனது பெயரில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் விசாரணைக்கு அழைத்தார்கள். முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்மீது புகார் கொடுக்கப்பட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் உயில் எழுதப்படவில்லை என்றாலும் அதனால் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

// True copy//
Sd/- M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி